# மருத்துவக் கல்வி பட்டப் பின்படிப்பு நிறுவனம்

## கொழும்புப் பல்கலைக்கழகம்

# பதவி வெற்றிடங்கள்

2024-12-16ஆம் திகதி வரை பின்வரும் பதவிகளுக்காக பொருத்தமான தகைமை வாய்ந்த நபர்களிடமிருந்து கொழும்பு பல்கலைக்கழகத்தின் மருத்துவக் கல்வி பட்டப்பின்படிப்பு நிறுவனம் அழைக்கின்றது.

**நிரந்தரப் பதவிகள்:**

1. சிகிச்சை விஞ்ஞானம் மற்றும் ஆய்வுகூட விஞ்ஞானத்தில் விரிவுரையாளர் (தகுதிகாண்), விரிவுரையாளர் (சேவை உறுதிப்படுத்தப்படாத), சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் II/I.
2. மருத்துவக் கல்வியில் விரிவுரையாளர் (தகுதிகாண்), விரிவுரையாளர் (சேவை உறுதிப்படுத்தப்படாத), சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் II/I.

**சம்பள அளவு**

அ) சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் I - ரூபா 91310-7x2170-106500 மாதாந்தம். U-AC 3 (I) 2020-01-01ஆம் திகதியில்

ஆ) சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் II - ரூபா 79360-11x1630-97290 மாதாந்தம். U-AC 3 (II) 2020-01-01ஆம் திகதியில்

இ) சிரேஷ்ட விரிவுரையாளர் (சேவை உறுதிப்படுத்தப்படாத) - ரூபா 69580 – 5x1630–77730 மாதாந்தம். U-AC 3 (III) 2020-01-01ஆம் திகதியில்

ஈ) சிரேஷ்ட விரிவுரையாளர் (தகுதிகாண்) - ரூபா 54600-10x1335-67950 மாதாந்தம். U-AC 3 (IV) 2020-01-01ஆம் திகதியில்

மேற்கூறப்பட்ட சம்பளத்திற்குப் புறம்பாக வாழ்க்கைச் செலவுப் படி மற்றும் ஏனைய அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவுகளும் வழங்கப்படும்.

**விசேடக் குறிப்பு**

MD மற்றும் சபை சான்றுகளைக் கொண்டுள்ள விண்ணப்பதாரிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

ஓய்வுபெற்ற சுகாதார அமைச்சு ஆலோசகர்கள் மற்றும் பல்கலைக்கழக கல்வியாளர் ஓய்வினை விடுமுறையில் (Sabbatical Leave) இருக்கும் விண்ணப்பதாரர்கள் ஒப்பந்த நியமனத்திற்கு கவனத்திற் கொள்ளப்படுவர்.

**ஓய்வினை விடுமுறைக்கான உரிமை**

இந்தப் பதவியில் உள்ளவர்கள் ஏழு வருட கால சேவையினைப் பூர்த்தி செய்ததன் பின் முழுமையான சம்பளத்துடன் ஒரு வருடம் அல்லது சம்பளமற்ற இரண்டு வருட ஓய்வினை விடுமுறைக்கான உரிமையைப் பெறுவர். ஓய்வினை விடுமுறையில் வெளிநாடு செல்வோர் அவருக்கும் அவரது வாழ்க்கைத் துணைக்குமான முழுமையான அனுமதியைப் பெறத் தகுதியுடையவர்களாவர்.

**முக்கியம்**

உங்களது தொழில்சார்ந்த, கல்விசார்ந்த மற்றும் ஏனைய தகைமைகளை நிரூபிப்பதற்கு சான்றிதழ்களின் புகைப்படப் பிரதிகளை விண்ணப்பத்துடன் தயவுசெய்து இணைக்கவும்.

உயர் கல்வி நிறுவனங்கள், அரசாங்கத் திணைக்களங்கள் மற்றும் அரச கூட்டுத்தாபனங்களில் பணியாற்றுபவர்களின் விண்ணப்பங்களை அவர்களது நிறுவனத்தின் தலைமையினூடாக அனுப்புதல் வேண்டும். இந்தத் தேவைப்பாட்டிற்கு இணங்காத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

பதவி விபரங்கள் மற்றும் விண்ணப்பப் படிவங்கள் உள்ளடங்கலான மேலதிக விபரங்களை மருத்துவக் கல்வி பட்டப் பின்படிப்பு நிறுவனத்தின் இணையதளத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம். (pgim.cmb.ac.lk)

**விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தல்**

முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை இயைபுடைய சான்றிதழ்களின் பிரதிகள் சகிதம் 2024-12-16ஆம் திகதி அல்லது அதற்கு முன் saradmin@pgim.cmb.ac.lk எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும் அல்லது நேரடியாக கொண்டுவந்து ஒப்படைத்தல் வேண்டும் அல்லது பிரதிப் பதிவாளர், மருத்துவக் கல்வி பட்டப் பின்படிப்பு நிறுவனம், இல. 160, பேராசிரியர் நந்ததாச கோதாகொட மாவத்தை, கொழும்பு-07 எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பங்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் அல்லது மின்னஞ்சலின் விடயத்தில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயரைக் குறிப்பிடுதல் வேண்டும்.

முடிவுறுத்தல் திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் கவனத்திற் கொள்ளப்படமாட்டாது.

**பணிப்பாளர்,**
**மருத்துவக் கல்வி பட்டப்பின்படிப்பு நிறுவனம்,**
**இல. 160, பேராசிரியர் நந்ததாச கோதாகொட மாவத்தை,**
**கொழும்பு-07**

**2024-11-24.**